தின காற்று

## ஏற்காட்டில் ரெட்ரீட் தொன் போஸ்கோ நிறுவனத்தின் 54வது ஆண்டு தின விழா;

# இயற்கை விழிப்புணர்வு பேரணி





ஏற்காடு, பிப்.28-

ஏற்காடு பேருந்து நிலையத்திலிருந்து துவங்கிய பேரணி ரெட்ரீட் தொன் போஸ்கோ இல்லம் சென்று முடிந்தது. இப்பேரணியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் தன்னார்வளர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டு மரங்கள் வளர்ப்பு மற்றும் சுகாதாரம், இயற்கை வளங்களை பாதுகாத்தல் போன்ற விழிப்புணர்வு குறிப்பிட்டு பதாகைகள் ஏந்தியும் ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி பேரணியாக சென்றனர்.

ரெட்ரீட் தொன் போஸ்கோ இல்லத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்படும் மேலும் கிராம பகுதிகளில் இதேபோன்று விழிப்புணர்வை ஏற்படுத்தவும் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டு குழந்தைகளுக்கு பரிசு பொருட்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

இதில் சிறப்பு விருந்தினராக டாக்டர் தாம்சன் மற்றும் காவல் ஆய்வாளர்கள், மஞ் சகுட்டை ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர், ரெட்ரீட் பொறுப்பாளர்கள் அருட்தந்தை. அருள் மாறன், ரெட்ரீட் இல்லத் தந்தை மற்றும் அருட்தந்தையர்கள், சகோதரர்கள், இளைஞர்கள். திரளானோர் கலந்துகொண்டு பேரணியாக சென்றனர்.